FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, யூன் - 2016
## Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | பொருளியல் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

கவனிக்குக:-
- ✶ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ✶ 01 - 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து புள்ளடித்தாளில் (X) இடுவதன் மூலம் காட்டுக.

01) “பொருளாதார வளர்ச்சியானது நேர்க்கணியமாக அமைவதுடன் அது சனத்தொகை வளர்ச்சி வீதத்தைவிட உயர்வாக இருத்தல் வேண்டும்” என பொருளாதார வல்லுநர்கள் கருத்து வெளியிட்டனர். இக்கூற்று
(1) பேரினப் பொருளியல் சார்ந்தது.
(2) சிற்றினப் பொருளியல் சார்ந்தது.
(3) நியமப் பொருளியல் சார்ந்தது.
(4) நேர் பொருளியல் சார்ந்தது.
(5) பருநிலைப் பொருளியல் சார்ந்தது.

02) பின்வருவனவற்றுள் தீங்கிழைக்கும் பண்டமாகக் கருதக்கூடியது
(1) பழுதடைந்த உணவு
(2) யுத்த தளபாடங்கள்
(3) ஐஸ்கிறீம்
(4) தூய்மையற்ற காற்று
(5) வெறிக் குடிவகை

03) பின்வரும் சேர்க்கைகளில் மாறுநிலைப் பொருளாதார நாடுகளின் சேர்க்கை எது?
(1) ரஷ்யா, கனடா, போலந்து, சிங்கப்பூர்
(2) ரூமேனியா, பல்கேரியா, போலந்து, ரஷ்யா
(3) ரூமேனியா, ரஷ்யா, அமெரிக்கா, ஆர்ஜண்டீனா
(4) போலந்து, இலங்கை, இந்தியா, இத்தாலி
(5) சூடான், சம்பியா, போலந்து, வடகொரியா

04) நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லையின் வழியே
(1) தொழிநுட்ப முன்னேற்றம் காணப்படும்.
(2) கிடைக்கத்தக்க வளங்கள் சில பயன்படுத்தப்படவில்லை.
(3) சகல வளங்களும் திறனாக பயன்படுத்தப்படுகின்றன.
(4) அமையச் செலவின்றி கிடையச்சு உற்பத்தி அதிகரிக்க முடிதல்.
(5) பொருளாதாரத்தில் உற்பத்தி வினைத்திறனின்மை நிலவுகிறது.


05) உற்பத்தி இயல்தகவு வளையி தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் மிகச் சரியான கூற்று
(1) எல்லையின் மீதுள்ள எல்லாப் புள்ளிகளும் பொருளாதார வினைத்திறனைக் குறிக்கும்.
(2) உற்பத்தி எல்லையின் மீதுள்ள ஒரு சிறப்புப் புள்ளி மட்டும் பொருளாதார வினைத்திறனைக் குறிக்கும்.
(3) உற்பத்தி எல்லையின் மீதுள்ள ஒரு சில புள்ளிகள் மட்டும் உற்பத்தி வினைத்திறனைக் குறிக்கும்.
(4) உற்பத்தி எல்லையின் மீதுள்ள ஒரு சிறப்புப் புள்ளி மட்டும் உற்பத்தி வினைத்திறனைக் குறிக்கும்.

(5) உற்பத்தி இயல்தகவு எல்லைக்கு வலப்புறமாக அமைந்த ஓர் புள்ளி பொருளாதார வினைத்திறனைக் குறிக்கும்.

06) பின்வருவனவற்றுள் எந்த நிலைமை போட்டிச் சந்தையொன்றின் சமநிலை விலையில் ஓர் வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும்?
   (1) கேள்வி பூரண நெகிழ்வுள்ள நிலையில் நிறுவனங்களின் உற்பத்திச் செலவுகள் அதிகரித்தல்.
   (2) கேள்வி பூரண நெகிழ்வற்ற நிலையில் நிறுவனங்களின் ஊழியச் செலவுகள் அதிகரித்தல்.
   (3) கேள்வி பூரண நெகிழ்வற்ற நிலையில் நிறுவனங்களின் உற்பத்திச் செலவுகள் குறைவடைதல்.
   (4) நிரம்பல் பூரண நெகிழ்வற்ற நிலையில் வரிகள் அதிகரித்தல்
   (5) நிரம்பல் பூரண நெகிழ்வுள்ள நிலையில் வரிகள் அதிகரித்தல்

07) இரண்டு மில்லியன் வாடிக்கையாளரைக் கொண்டுள்ள பால்மா உற்பத்தி நிறுவனமொன்று தனது உற்பத்திப் பொருளின் விலையினை 200 ரூபாவாகத் தீர்மானிக்கின்றது. பால்மாவின் விலை நெகிழ்ச்சி $^{-}2.0$ ஆகும். நிறுவனம் இதன் விலையினை 25% அதிகரிக்குமாயின் மொத்த வருவாயானது
   (1) 150 மில்லியனால் குறையும்.
   (2) 150 மில்லியனால் அதிகரிக்கும்.
   (3) 50 மில்லியனால் அதிகரிக்கும்.
   (4) 50 மில்லியனால் குறையும்.
   (5) 100 மில்லியனால் மாற்றமடையும்.


08) இங்கு தரப்பட்டுள்ள வரைபடமானது குறைந்தபட்ச விலைக் கட்டுப்பாட்டின் போது ஏற்படும் மிகை நிரம்பலினை அரசு கொள்வனவு செய்யும் நிலைமையினைக் காட்டுகின்றது. $P$ சமநிலை விலையையும் $P_1$ கட்டுப்பாட்டு விலையினையும் குறிக்கும்.




சந்தை சமநிலையில் உள்ள போது மொத்தக் கேள்வித்தொகை யாது? அரசின் கொள்வனவுத் தொகை யாது?

| | மொத்த கேள்வித் தொகை | அரசின் கொள்வனவுத் தொகை |
|---|---|---|
| (1) | $0\,Q$ | $Q_2 - Q_1$ |
| (2) | $0\,Q_1$ | $Q_2 - Q_1$ |
| (3) | $0\,Q_1$ | $Q_2 - Q$ |
| (4) | $0\,Q_2$ | $Q_2 - Q_1$ |
| (5) | $Q$ | $Q_1 - Q$ |

09) வரைபடமானது பொருளொன்றின் கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகின்றது.



சமநிலைமட்ட வெளியீட்டிற்காக உற்பத்தியாளர் வழங்கத் தயாராகவுள்ள மொத்தப் பண அளவினைக் குறிக்கும் பிரதேசம் எது?

(1) $PEN$ (2) $OPEQ$ (3) $PP_1E$ (4) $ONEQ$ (5) $NP_1E$

10) $X$ பண்டத்தின் விலை குறையும் போது பதிலீட்டு விளைவு $40$ ஆக இருந்ததோடு வருமான விளைவு $-50$ ஆக அமைந்தது. இதன் படி $X$ பண்டமானது


(1) சாதாரண பண்டமாகும்.

(2) கிபன் பண்டமாகும்.

(3) இழிவுப் பண்டமாகும்.

(4) பிரதியீட்டுப் பண்டமாகும்.

(5) நிரப்பு பண்டமாகும்.

11) 


பண்டமொன்றின் உற்பத்தியாளருக்கு அலகுக்கான மானியமாக ரூபா $2.00$ வழங்கப்படுவதனை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. இவ்வரைபின் படி மானியம் வழங்கிய பின்னர் உற்பத்தியாளர் மிகை

(1) ரூபா $80$ ஆகும்.

(2) ரூபா $120$ ஆகும்.

(3) ரூபா $180$ ஆகும்

(4) ரூபா $240$ ஆகும்.

(5) ரூபா $480$ ஆகும்.

12) விலைக்கேள்வி நெகிழ்ச்சி வாய்ந்த பண்டமொன்றின் மீது அரசு அலகு மானியமொன்றை வழங்குவதாகக் கருதுக. பின்வரும் சேர்க்கைகளில் பொருத்தமானது

| | நுகர்வோர் செலுத்தும் விலை | உற்பத்தியாளனுக்குக் கிடைக்கும் விலை | நுகர்வோன் மிகை | உற்பத்தியாளர் மிகை |
|---|---|---|---|---|
| (1) | குறையும் | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (2) | குறையும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (3) | அதிகரிக்கும் | குறையும் | அதிகரிக்கும் | குறையும் |
| (4) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் | குறையும் | குறையும் |
| (5) | குறையும் | குறையும் | குறையும் | அதிகரிக்கும் |

13) நாடொன்றின் கைத்தொழிற் பொருளுக்கான உள்நாட்டுச் சந்தைக் கேள்வி மற்றும் சந்தை நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் காட்டப்படுகின்றன.

$$Qd = 1000 - 20P \ , \quad Q_5 = -600 + 20P$$

அத்துடன் அந்நாட்டின் கைத்தொழிற் பொருளுக்கான சந்தை சர்வதேசத்திற்கு திறந்து விடப்படுவதாகவும் பொருளின் உலக விலை அலகொன்றிற்கு ரூபா $35$ ஆகவும் தரப்படுகிறது. சர்வதேச வர்த்தகத்திற்கு திறந்து விடப்பட்டபின் சந்தையின் உள்நாட்டு நிரம்பல் அளவு யாது?

(1) $150$ அலகுகள்


(2) $100$ அலகுகள்

(3) 300 அலகுகள்

(4) 175 அலகுகள்

(5) 200 அலகுகள்

14) தரப்பட்ட காலப்பகுதியில் போட்டிச் சந்தையொன்றிற்கான கேள்வி நிரம்பல் வளையிகளைப் பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.





கட்டுப்பாட்டு விலையில் ஏற்படும் பற்றாக்குறை நிரம்பலினை அரசு இறக்குமதி மூலம் நிவர்த்தி செய்கிறது எனக் கருதுக. இறக்குமதியின் பின்னர் பின்வரும் சேர்க்கைகளில் மிகச் சரியானது எது?

| | நுகர்வோர் மிகை | பொருளாதார மிகை | தேறிய சமூக நலன் |
|---|---|---|---|
| (1) | A | BDH | FG |
| (2) | ABD | H | CE |
| (3) | ABCDEF | H | CE |
| (4) | ABCDEFG | ABCDEGH | FG |
| (5) | ABC | ABCDEH | CE |

15) எயாரெல் சிம் மற்றும் டயலொக் சிம் ஆகியவை ஒன்றுக்கொன்று பதிலீடானவையாகும். எயாரெல் சிம்மின் விலை இரட்டிப்படையும் போது

(1) டயலொக் சிம்மிற்கான கேள்வி உயரும்.
(2) டயலொக் சிம்மிற்கான கேள்வி குறையும்.
(3) டயலொக் சிம்மிற்கான கேள்வித்தொகை அதிகரிக்கும்.
(4) எயாரெல் சிம்மிற்கான கேள்வி அதிகரிக்கும்.
(5) டயலொக் சிம்மிற்கான விலை உயரும்.

16) 


மேலுள்ள வரைபடம் உருளைக்கிழங்கிற்கான சந்தைக் கேள்வி நிரம்பல் வளையிகளைக் காட்டுகின்றது. அரசாங்கம் ரூபா 15 இனை உற்பத்தியாளர் ஆதரவு விலையாக நிர்ணயித்து அதனால் தோன்றும் மிகை நிரம்பலினைக் கொள்வனவு செய்வதனால் ஏற்படும் தேறிய சமூக நலன் யாது?

(1) ரூபா 225
(2) ரூபா 437.5
(3) ரூபா 202.5
(4) ரூபா 22.5
(5) ரூபா 480

17) $x$ பண்டத்தின் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி $-1.7$ எனக் கருதுக. இப்பண்டத்தினது விலையினை நிறுவனம் குறிப்பிட்ட சதவீதத்தால் அதிகரிக்குமாயின் நிறுவனத்தின் மொத்த வருமானம்

(1) 17 சதவீதத்தினரால் அதிகரிக்கும்.

(2) விலை அதிகரிக்கும் வீதத்தால் அதிகரிக்கும்.
(3) வீழ்ச்சியடையும்.
(4) அதிகரிக்கும்.
(5) மாறாதிருக்கும்.

18) கீழுள்ள அட்டவணை நிறுவனமொன்றின் மொத்த மாறும் செலவுகளைக் காட்டுகின்றது.

| வெளியீடு | மொத்த மாறும் செலவு ரூபா |
|---|---|
| 1 | 20 |
| 2 | 35 |
| 3 | 45 |
| 4 | 60 |
| 5 | 80 |
| 6 | 105 |

எந்த வெளியீட்டு மட்டத்தில் எல்லைச் செலவு அதன் அதிதாழ்ந்த புள்ளியில் இருக்கும்?
(1) 2 அலகுகள்
(2) 3 அலகுகள்
(3) 4 அலகுகள்
(4) 5 அலகுகள்
(5) 6 அலகுகள்

19) கணனி உற்பத்தி நிறுவனமொன்று தனது வேலையாட்களை 300 இலிருந்து 350 ஆக அதிகரிக்கின்றது. இதன் விளைவாக அதன் வெளியீடானது வாரமொன்றிற்கு 6000 அலகுகளில் இருந்து 7000 அலகுகளாக அதிகரிக்கின்றது. மோட்டார் உற்பத்தி நிறுவனம் தனது வேலையாட்களை 800 இலிருந்து 1000 ஆக அதிகரிக்கின்றது. இதன் விளைவாக அந் நிறுவனத்தின் வெளியீடானது வாரம் ஒன்றிற்கு 20,000 அலகுகளில் இருந்து 22000 அலகுகளாக அதிகரிக்கின்றது. இவ்விரு நிறுவனங்களிலுமுள்ள வேலையாட்களின் தொழிலாளர் உற்பத்தித் திறனில் எத்தகைய மாற்றம் ஏற்படும்.

| | கணனி நிறுவனத்தின் உற்பத்தித்திறன் | மோட்டார் நிறுவனத்தின் உற்பத்தித்திறன் |
|---|---|---|
| (1) | மாறாதிருக்கும் | அதிகரிக்கும் |
| (2) | அதிகரிக்கும் | குறையும் |
| (3) | குறையும் | மாறாதிருக்கும் |
| (4) | குறையும் | குறையும் |
| (5) | மாறாதிருக்கும் | குறையும் |

20) நிறைபோட்டி நிறுவனமொன்றின் இலாப உச்சப்படுத்தல் வெளியீடு 200 அலகுகளில் எல்லைச் செலவு 100 ரூபாவாகவும் நிறுவனத்தின் மொத்த மாறும் செலவு $(TVC)$ 13000 ரூபாவாகவும் மொத்த அசாதாரண இலாபம் ரூபா 4000 ஆகவும் உள்ளதெனில் நிறுவனத்தின் சராசரி நிலையான செலவின் பெறுமதி
(1) ரூபா 25 ஆகும்.
(2) ரூபா 15 ஆகும்.

(3) ரூபா 50 ஆகும்.

(4) ரூபா 80 ஆகும்.

(5) ரூபா 65 ஆகும்.

21) குறுங்கால உற்பத்திச் செயற்பாட்டில் எல்லை உற்பத்தி உச்ச நிலையை எய்தும் போது

(1) மொத்த உற்பத்தி குறைந்து செல்லும்.


(2) சராசரி உற்பத்தி உச்ச நிலையில் காணப்படும்.

(3) சராசரி மாறும் செலவு இழிவுப் புள்ளியை அடையும்.

(4) எல்லைச் செலவு சராசரி மாறும் செலவிற்குச் சமப்படும்.

(5) எல்லைச் செலவு அதிதாழ்ந்த புள்ளியில் இருக்கும்.

22) வரைபின் படி நிறுவனத்தின் சிக்கன இலாபம் பெறும் விலைமட்டம் மற்றும் வெளியீட்டு மட்டம் எது?




| | விலை மட்டம் | வெளியீட்டு மட்டம் |
|---|---|---|
| (1) | $P$ | $Q_2$ |
| (2) | $P_1$ | $Q_1$ |
| (3) | $P_1$ | $Q_2$ |
| (4) | $P_2$ | $Q_2$ |
| (5) | $P_2$ | $Q_1$ |

23) எளிய பொருளதாரமொன்றின் தன்னிச்சையான நுகர்வு 200 ஆகவும் எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.75 ஆகவும் காணப்பட்டது. இப்பொருளாதாரத்தில் முதலீடு 250 மில்லியனால் அதிகரிக்குமாயின் சேமிப்பு மட்டம் எவ்வளவால் மாற்றமடையும்?

(1) ரூபா 700 மில்லியனால் அதிகரிக்கும்.

(2) ரூபா 750 மில்லியனால் குறையும்.

(3) ரூபா 250 மில்லியனால் குறையும்.

(4) ரூபா 250 மில்லியனால் அதிகரிக்கும்.

(5) ரூபா 600 மில்லியனால் அதிகரிக்கும்.

24) வர்த்தக சகடவோட்டமொன்றின் விரிவாக்கக் கட்டத்தின் போது

(1) முதலீடுகள் அதிகரிப்பதுடன் வெளியீடுகள் வீழ்ச்சியடையும்.

(2) வேலையின்மை அதிகரிப்பதுடன் வெளியீடுகள் அதிகரிக்கும்.

(3) தொழில்வாய்ப்புக்கள் அதிகரிப்பதுடன் வெளியீடும் அதிகரிக்கும்.

(4) தொழில்வாய்ப்புக்கள் வீழ்ச்சியடையும் வெளியீடு அதிகரிக்கும்.

(5) வேலையின்மையும், முதலீடுகளும் விரிவடையும்.

25) தேசிய வருமானத்திலிருந்து சந்தைவிலையிலான மொத்த உள்நாட்டுற்பத்தியினைக் கணிப்பதற்கு

(1) பெறுமானத்தேய்வு தேறிய மறைமுக வரிகளைக் கூட்டி தேறிய உள்வரும் காரணி வருவாயைக் கழித்தல் வேண்டும்.


(2) பெறுமானத் தேய்வினைக் கழித்து மறைமுகவரி மற்றும் கிடைத்த வெளிநாட்டுக்காரணி வருவாயைக் கூட்டுதல் வேண்டும்.

(3) தேறிய மறைமுக வரி மற்றும் பெறுமானத் தேய்வினைக் கழித்து தேறிய வெளிநாட்டுக்காரணி வருவாயைக் கூட்டுதல் வேண்டும்.

(4) தேறிய மறைமுக வரி, பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கூட்டி தேறிய வெளிநாட்டுக் காரணி வருவாயை கழித்தல் வேண்டும்.

(5) மறைமுக வரி மானியத்தைக் கழிப்பதுடன் பெறுமானத் தேய்வினையும் கழித்தல் வேண்டும்.

26)




மேலுள்ள வரைபடம் நேர்கோட்டு சேமிப்பு வளையியொன்றைக் காட்டுகின்றது. பூச்சிய வருமானத்தில் சேமிப்பு $-2000$ ஆயின் வளையியின் $y$ புள்ளியில் சேமிப்பு மட்டம் யாது?

(1) ரூபா 2000 ஆகும். (2) ரூபா 3000 ஆகும்.

(3) ரூபா 4000 ஆகும். (4) ரூபா 5000 ஆகும்.

(5) ரூபா 10000 ஆகும்.

27) அரச துறையற்ற மூடப்பட்ட பொருளாதாரமொன்றின் முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி 2.5 ஆகுமெனின் பொருளாதாரத்தின் எல்லை சேமிப்பு நாட்டத்தின் பெறுமதி

(1) 0.3 ஆகும். (2) 0.5 ஆகும். (3) 0.75 ஆகும்.

(4) 0.4 ஆகும். (5) 0.6 ஆகும்.


28) ஏனையவை மாறாநிலையில் பின்வருவனவற்றுள் எது மொத்தக் கேள்வியை வீழ்ச்சியடையச் செய்யும்?

(1) வருமானம் மீதான வரியில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(2) அரசாங்கச் செலவீட்டில் ஏற்படும் ஓர் அதிகரிப்பு

(3) முதலீட்டில் ஏற்படும் கணிசமான அதிகரிப்பு
(4) ஏற்றுமதிகள் அதிகரித்தல்
(5) இறக்குமதிகளில் ஏற்படும் ஓர் வீழ்ச்சி

29) எளிய பொருளாதாரமொன்றின் சமநிலை மட்டத்தினைப் பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.




இப்பொருளாதாரத்தில் அரசு 200 மில்லியன் ரூபாவினைச் செலவு செய்யுமாயின் பொருளாதார மாற்றங்களைக் காட்டும் சரியான சேர்க்கை எது?

| | தேசிய வருமானத்தில் மாற்றம் | நுகர்வில் மாற்றம் | சேமிப்பில் மாற்றம் |
|---|---|---|---|
| (1) | 1000 மில் | 200 மில் | 800 மில் |
| (2) | 2000 மில் | 500 மில் | 400 மில் |
| (3) | 1000 மில் | 800 மில் | 200 மில் |
| (4) | 1000 மில் | 200 மில் | 800 மில் |
| (5) | 1000 மில் | 900 மில் | 100 மில் |

30) எளிய பொருளாதாரமொன்றின் நுகர்வுச்சார்பு $C = 400 + 0.8yd$ ஆகும். தேசிய வருமான மாற்றத்தின் விளைவினால் சேமிப்பு 200 மில்லியனால் அதிகரித்தது ஆயின் வருமானம் எவ்வளவால் மாற்றமடைந்திருக்கும்.
(1) 100 மில்லியன் அதிகரிப்பு
(2) 200 மில்லியன் அதிகரிப்பு
(3) 1000 மில்லியன் வீழ்ச்சி
(4) 1000 மில்லியன் அதிகரிப்பு
(5) 800 மில்லியன் வீழ்ச்சி

31) பொருளாதாரம் நிறை தொழில் மட்டத்தில் உள்ள போது கேள்வித்தூண்டல் பணவீக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய காரணி பின்வருவனவற்றுள் எது?
(1) சம்பள மட்டம் உயர்வடைதல்
(2) பொருளாதாரத்தில் வரிகள் குறைக்கப்படுதல்
(3) ஏற்றுமதிகள் குறைவடைதல்
(4) இறக்குமதிகள் அதிகரிக்கப்படுதல்
(5) முதலீடுகளில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி

32) பொருளாதாரமொன்றின் தேசிய வெளியீட்டின் பணப்பெறுமதி 20% தினால் அதிகரித்த வேளை பொது விலைமட்டம் 10 சதவீதம் அதிகரித்திருந்தது. பணத்தின் புழக்க சுற்றோட்ட வேகம் மாறாதாயின் பணத்தின் அளவு எவ்வளவால் மாற்றமடைந்திருக்கும்?
(1) 32 சதவீதம் அதிகரிக்கும்.
(2) 132 சதவீதம் அதிகரிக்கும்.

(3) 28 சதவீதம் அதிகரிக்கும்.

(4) 32 சதவீதம் வீழ்ச்சியடைந்திருக்கும்.

(5) 20 சவீதம் குறைந்திருக்கும்.

33) மத்திய வங்கியானது திறந்த சந்தையில் 200 மில்லியன் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்கின்றது. ஒதுக்குத் தேவையானது 10% மாகவும் சகல வங்கிகளிலும் மிகை ஒதுக்குகள் எவையுமில்லை எனவும் கொண்டால் நாட்டின் பணநிரம்பலின் மீது ஏற்படுத்தும் கூட்டு விளைவினால்

(1) பணநிரம்பல் ரூபா 200 மில்லியன் வீழ்ச்சி ஏற்படும்.

(2) பணநிரம்பல் ரூபா 2000 மில்லியன் வீழ்ச்சி ஏற்படும்.

(3) பணநிரம்பல் ரூபா 2000 மில்லியன் அதிகரிக்கும்.

(4) பணநிரம்பல் ரூபா 10000 மில்லியன் அதிகரிக்கும்.

(5) பணநிரம்பல் ரூபா 1000 மில்லியன் குறையும்.

34) 2100 மில்லியன் $M_1$ பணநிரம்பல் கொண்ட பொருளாதாரத்தில் 2000 மில்லியனை பொதுமக்கள் வங்கிகளில் வைப்புச் செய்கின்றனர். வங்கிகள் 10% காசு ஒதுக்கைப் பேணுகின்றன எனின் பணப்பெருக்கியின் பெறுமானம்

(1) 0.5 ஆகும்.

(2) 7 ஆகும்.

(3) 2.5 ஆகும்.

(4) 2 ஆகும்.

(5) 3 ஆகும்.

35) ரூபா 10,000 மிகை ஒதுக்குகளைப் பேணும் வணிக வங்கியொன்று ரூபா 200,000 வைப்புப் பொறுப்புக்களையும் ரூபா 25000 உண்மைப் பண ஒதுக்குகளையும் கொண்டுள்ளது. வங்கியின் ஒதுக்கு வீதம்

(1) 7.5 வீதம்

(2) 8 வீதம்

(3) 15 வீதம்

(4) 20 வீதம்

(5) 8.5 வீதம்

36) இழிவுநிலை வட்டி வீதமொன்றில்

(1) புழக்க நோக்கப் பணக் கேள்வி கிடையச்சிற்கு சமாந்தரமாகும்.

(2) ஊக நோக்கப் பணக் கேள்வி நிலைக்குத்தச்சிற்குச் சமாந்தரமாகும்.

(3) பாதுகாப்பு நோக்குக் கேள்வி கீழிலிருந்து மேல் நோக்கிச் செல்லும்.

(4) உத்தேச நோக்கப் பணக்கேள்வி முடிவில் நெகிழ்ச்சியுடையதாகும்.

(5) ஊக நோக்குப் பணக் கேள்வி கிடையச்சிற்குச் செங்குத்தாகும்.

37) வணிக வங்கி முறைமையொன்றில் உள்ள வங்கிகள் தமது வைப்புக்களில் 10 சதவீதத்தினை ஒதுக்காகப் பேணுகின்றன. இம்முறையில் உள்ள வங்கியொன்று ரூபா 1000 மில்லியன் புதிய காசு வைப்பினைப் பெற்றுக் கொள்கின்றது. புழக்கத்திலுள்ள பணத்தின் அளவில் மாற்றமில்லையாயின் வங்கிமுறை உருவாக்கக்கூடிய புதிய கடன்களின் உச்ச அளவு

(1) 10000 மில்லியன்

(2) 100 மில்லியன்

(3) 900 மில்லியன்

(4) 800 மில்லியன்

(5) 9000 மில்லியன்

38) நுகர்வில் போட்டித்தன்மையற்றதாகவும், நுகர்விலிருந்து விலக்கப்பட முடியாததுமான பண்டங்கள்

(1) இலவசப் பொருட்கள்

(2) தூய பொதுப் பொருட்கள்

(3) தீங்கிழைக்கும் பொருட்கள்

(4) தீய பண்டங்கள்

(5) தனியார் பண்டங்கள்

39) 2014 ம் ஆண்டு இலங்கையின் வரி அரசிறையில் மிகக்கூடிய வரி வருமானத்தினைக் கொண்டுள்ள வரி வகை யாது?

(1) கலால் வரி

(2) இறக்குமதி வரி

(3) வருமான வரி

(4) ஏனைய வரிகள்

(5) பெறுமதி சேர்வரி

40) சந்தை தோல்வி ஏற்படுவதற்குரிய காரணமாக அமைவது எது?

(1) அரசியல் உறுதிப்பாடின்மை

(2) வள ஒதுக்கீட்டில் வினைத்திறனின்மை

(3) வளங்களின் ஒதுக்கீடு உத்தமமாகக் காணப்படுதல்.

(4) இன ரீதியான முரண்பாடுகள் தோன்றுதல்.

(5) வருமானப் பங்கீட்டில் நியாயத்துவம் பேணுதல்.

41) பின்வருவனவற்றுள் எப்பண்டங்கள் சமூக நன்மைகள் அவற்றின் தனியார் நன்மைகளைவிட கூடுதலாகக் காணப்படும்?

(1) வெளிவாரி விளைவுகளையுடைய பண்டங்கள்

(2) இலவசப் பொருட்கள்

(3) தனியார் உற்பத்திப் பண்டங்கள்

(4) உணவுப் பொருட்கள்

(5) மேன்மைப் பண்டங்கள் (*Merit goods*)

42) பின்வருவன நாடொன்றின் சென்மதி நிலுவைப் பற்றிய சில தரவுகளாகும்.

| வகை | பெறுமதி பில்லியன் ரூபாவில் |
|---|---|
| வர்த்தக மீதி | $-450$ |
| இலாபம் பங்கிலாபம் என்பவற்றின் தேறிய வெளிப்பாய்ச்சல் | 400 |
| ஊழியர் இழப்பீட்டுப் பெறுகை | 650 |
| தொழிலாளர் பண அனுப்பல்கள் பெறுகை | 200 |
| நடைமுறைக் கணக்கு மீதி | $-600$ |
| பணிகளின் மொத்தப் பெறுகை | 1300 |

மேற்படி தரவுகளில் இருந்து பணிகளின் கொடுப்பனவுப் பெறுமதி யாது?

(1) 1900 பில்லியன்

(2) 700 பில்லியன்

(3) 1300 பில்லியன்


(4) 400 பில்லியன்

(5) 1000 பில்லியன்

43) இலங்கையின் தற்போதைய பிரதான ஆடை ஏற்றுமதிச் சந்தை
(1) கனடா
(2) சுவீடன்
(3) ஐக்கிய அமெரிக்கா
(4) அரபு நாடுகள்
(5) ஐரோப்பிய ஒன்றியம்

44) கற்பிதமான ஒரு நாட்டின் இறக்குமதி விலைச்சுட்டெண் 100 சதவீதம் அதிகரித்தவேளை அதன் வர்த்தக மாற்று விகிதம் 25 சதவீதத்தால் மட்டும் வீழ்ச்சியடைந்ததாயின் ஏ/மதி விலைச் சுட்டெண் எவ்வளவால் மாற்றமடைந்திருக்கும்?
(1) 50 சதவீதம் அதிகரித்திருக்கும்
(2) 150 சதவீதம் அதிகரித்திருக்கும்
(3) 50 சதவீதம் வீழ்ச்சியடைந்திருக்கும்
(4) 75 சதவீதம் வீழ்ச்சியடைந்திருக்கும்
(5) 40 சதவீதம் அதிகரித்திருக்கும்

45) அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகள் தமது வளச்சேர்க்கையினை பயன்படுத்தி தொலைபேசி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றை உற்பத்தி செய்யும் போது ஒரு அலகு உள்ளீட்டினால் பெறக்கூடிய வெளியீட்டளவினை பின்வரும் தரவு காட்டுகின்றது.




இத்தரவின் அடிப்படையில்
(1) கனடா தொலைக்காட்சியினை ஏற்றுமதி செய்யும்.
(2) அமெரிக்கா தொலைபேசியினை இறக்குமதி செய்யும்.
(3) அமெரிக்கா தொலைபேசி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையுடையதுடன் தொலைக்காட்சி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியடைய வேண்டும்.
(4) கனடா தொலைக்காட்சி உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையுடையது. அத்துடன் தொலைக்காட்சி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியடைய வேண்டும்.
(5) கனடா தொலைக்காட்சியினை இறக்குமதி செய்யும்.

46) மனிதவள அபிவிருத்தி அறிக்கையின் படி மிக உயர்வான மனிதவள அபிவிருத்தியினைக் கொண்ட நாடுகளின் தொகுதி எது?
(1) நோர்வே, கனடா, ஒஸ்ரியா, சுவீடன்
(2) நோர்வே, அவுஸ்திரேலியா, சுவிர்சர்லாந்து, நெதர்லாந்து

(3) அவுஸ்திரேலியா, டென்மார்க், பின்லாந்து, சுவீடன்

(4) நோர்வே, சுவீடன், டென்மார்க், அமெரிக்கா

(5) நோர்வே, ஜப்பான், கனடா, ஒஸ்ரியா

47) நாடொன்றின் குடித்தொகை தொடர்பான தரவுகள் கீழே தரப்படுகின்றன. (யாவும் மில்லியன்களாகும்)

| வகை | தொகை மில்லியன் ரூபாவில் |
|---|---|
| தொழில் புரியும் வயதுச் சனத்தொகை | 40 |
| தொழில்புரியும் சனத்தொகை | 28 |
| வேலையற்றோர் தொகை | 02 |
| சனத்தொகை | 65 |

மேற்படி தரவுகளின் படி தொழிற்படை பங்குகொள்ளல் வீதம், வேலையின்மை வீதம் என்பவற்றைச் சரியாகக் காட்டும் சேர்க்கை எது?

| | தொழிற்படை பங்குகொள்ளல் வீதம் | வேலையின்மை வீதம் |
|---|---|---|
| (1) | 75 வீதம் | 6.6 வீதம் |
| (2) | 70 வீதம் | 5.6 வீதம் |
| (3) | 80 வீதம் | 8.0 வீதம் |
| (4) | 60 வீதம் | 4.0 வீதம் |
| (5) | 80 வீதம் | 6.6 வீதம் |

48) வறியவர்களுக்குச் சார்பான வளர்ச்சிச் செயன்முறைகளில் ஒன்று

(1) வறியவர்கள் சார்பாக மானியம் வழங்குதல்

(2) வறிய மக்களுக்குரிய மனித மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தல்

(3) சார்பு வரைவிலக்கணத்தினைக் கடைப்பிடித்தல்

(4) நாட்டின் மெய்தேசிய உற்பத்தியை விருத்தி செய்தல்

(5) உள்நாட்டு வளங்களை பெருமளவில் பயன்படுத்துதல்

49) அண்மைய ஆண்டுகளில் இலங்கையின் வேலையின்மையின் அளவு

(1) 4.2 % − 4.9 % இடைப்பட்டதாகும்.

(2) 5 % − 7 % இடைப்பட்டதாகும்.

(3) 5 % − 6 % இடைப்பட்டதாகும்.

(4) 2 % − 3 % இடைப்பட்டதாகும்.

(5) 2 .7 வீதமாக அமைகின்றது.

50) 2014 ம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் இலங்கையின் தலைக்குரிய வறுமைச் சுட்டெண் யாது?

(1) 15.2 % (2) 6.7 % (3) 8.9 % (4) 22.7 % (5) 10.5 %